**சுருக்கம்**

வேளாண்மை உழவர் நலத்துறை – 2021 - 2022 - ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மாநில அளவில், உள்ளூரில் உள்ள புதுமையான வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு பரிசு வழங்க 2021 - 2022 நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வேளாண்மை இயக்குநரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட ரூ.2.00 இலட்சத்தினை, 2022 - 2023 - ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 256** | **நாள் : 26.10.2022**

**திருவள்ளுவர் ஆண்டு, 2053**
**சுபகிருது, ஐப்பசி 09-ஆம் நாள்**

**படிக்க:**

1. அரசு ஆணை (நிலை) எண். 7, வேளாண்மை உழவர் நலத் (வேஉ_4) துறை, நாள்:10.01.2022.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண்.வேதபி3/தகவல்/83328/2020, நாள்:25.05.2022, 17.06.2022 மற்றும் 25.08.2022.

*****

**ஆணை :**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 – ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்:-

**"வேளாண்மையில் சிறப்பாகச் செயலாற்றும் விவசாயிகளுக்குப் பரிசு"**

> "இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதி, புதிய உள்ளூர் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் விவசாயிகளை இந்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து, பரிசு அளிக்கும், பாராட்டி மகிழும்."

2. முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏற்கனவே மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்தும், பரிசு பெறும் விவசாயிகளை தேர்வு செய்ய மாவட்ட, மாநில அளவில் குழு அமைத்தும், உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கருத்துருவில், 2022-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் உள்ளாட்சித் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்த காரணத்தினால் பயனாளிகள் தேர்வு மற்றும் மாவட்ட அளவிலான குழு ஒப்புதல் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதாகவும், இதனால் அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூ.2.00 இலட்சம்

காசாக்கப்படாமல் அரசிடம் மீண்டும் ஒப்படைப்பு செய்யப்பட்டதாகவும் 2021 - 22-ஆம் நிதி ஆண்டில் அரசிடம் மீண்டும் ஒப்படைப்பு செய்யப்பட்ட ரூ.2.00 இலட்சம் தொகையினை 2022 - 23 - ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு நிதி செலவினம் மேற்கொள்ள மறுமதிப்பீடு மற்றும் நிர்வாக அனுமதி ஆணை கோரப்பட்டுள்ளது.

4. மேலும், வேளாண்மை இயக்குநர் தமது கருத்துருவில், விருது பெறுபவர்களை தேர்ந்தெடுப்பதற்காக, மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழுவை அமைத்திட, உறுப்பினர்களை பரிந்துரை செய்தும், தேர்வு செய்யப்படும் இரண்டு விவசாயிகளுக்கு (தலா ரூ. 1.00 இலட்சம் வீதம்) பரிசினை வழங்க ஏதுவாக ரூ.2.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார். பரிசு வழங்க தேர்வு செய்யப்படும் இனம்/பரிசுத்தொகை விவரம் பின்வருமாறு வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

I. புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பங்கள் கண்டுபிடிப்பிற்காக ரூ.1 இலட்சம் மற்றும்
II. வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்பிற்காக ரூ.1 இலட்சம்

5. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பங்கள் / கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு பரிசு வழங்க ஏதுவாக ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு மறுசெல்லுபடியாக்கம் (Revalidation) வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2401 - 00 – பயிர் வளர்ப்பு – 001 - நெறிபடுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் - AA வேளாண்மைத் துறை – தலைமையிடப் பணியாளர்கள் – 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்.
> [த.தொ.கு: 2401 00 001 AA 35901] - ரூ.2,00,000/-

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,00,000/- 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி, மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், 2022 - 2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவினை அனுப்பும் போது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து நிதித் (வேளாண்மை (ம) உழவர் நலத்) துறைக்கு அனுப்புமாறு வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு. எண்.46191/2022, நிதி (வேளாண்மை உழவர் நலத்) துறை, நாள்:25.10.2022 – இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண் 1591 (ஆயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்று), (IFHRMS ASL No.2022101591)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்:**
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
மாநில பொதுக் கணக்காயர் (A&E), சென்னை – 18.
மாநில பொதுக் கணக்காயர் (Audit-1), சென்னை – 18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில பொதுக் கணக்காயர் (G&SSA), சென்னை – 35.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.
**நகல்:**
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-9.
நிதி (வேளாண்மை / வரவு செலவு பொது II/ வ.வ.I, ) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (வ&தி) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9.
(2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்